Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 4, 2023

வெள்ளிக்கிழமை ஓகஸ்ட் 04, 2023 | ஒளி: 09 கதிர் 055 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | Free

## எரிவாயு சிலிண்டர் விலை அதிகரிக்கும்

### சூட்சுமமாக அறிவித்தது லிட்ரோ

உலகளாவிய ரீதியில் எரிவாயு விலை உயர்வினால் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் இந்த மாதம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக லிட்ரோ நிறுவன தலைவரின் அறிவிப்பின் மூலம் அறியமுடிகிறது. தொடர்ச்சி P2






## மனைவியை பிரிந்தார் கனேடிய பிரதமர்

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ருடோவும் அவரது மனைவி சோஃபி கிரெகோயர் ட்ருடோவும் 18 வருட திருமண வாழ்க்கைக்குப் பின்னர், பிரிவதாக புதன்கிழமை (02) அறிவித்தனர். தொடர்ச்சி P2

நீர்க்கட்டண உயர்வுடன்

## கழிவகற்றல், சுத்திகரிப்பு கட்டணங்களும் அதிகரிப்பு




நீர் கட்டண திருத்தத்துக்கு இணையாக வியாழக்கிழமை (03) முதல் கழிவகற்றல் சுத்திகரிப்பு சேவை கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஏதேனுமொரு மாதத்தில் பாவனை பூச்சியமாக இருந்தாலும் நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் சுத்திகரிப்பு சேவை கட்டணத்தை செலுத்தியாக வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

# 13 குறித்து 15 க்குள் அறிவிக்க வேண்டும்



### சம்பந்தனுக்கு ஜனாதிபதியின் செயலாளர் கடிதம்

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துவது குறித்து தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எதிர்வரும் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் ஈ.எம்.எஸ்.பி ஏக்கநாயக்க, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுதியுள்ள கடிதத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



## யாழில் மீற்றர் இல்லாத ஓட்டோகளை அகற்றினர்

யாழ் நகரப் பகுதி ஓட்டோ தரிப்பிடத்தில் இருந்து கட்டணமானி (மீற்றர்) பொருத்தாத ஓட்டோ அகற்றும் நடவடிக்கையை யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்தனர்.

யாழ் நகர் பகுதியில் வியாழக்கிழமை (03) காலை முதல் பொலிஸார் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். தொடர்ச்சி P2

## டொலரும் தங்கமும் விலை குறைந்தன

இலங்கை மத்திய வங்கியினால் வியாழக்கிழமை (03) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளதுடன், தங்கத்தின் பெறுமதியும் குறைந்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 308 ரூபாய் 60 சதமாகவும் விற்பனை விலை 322 ரூபாய் 20 சதமாகவும் பதிவாகியுள்ளது. தொடர்ச்சி P2





கிரேட் வெஸ்டர்னில் கண்டெடுத்த

## சடலத்தின் இடது கையில் 'மதுசங்க'

■ ரஞ்சித் ராஜபக்ஷ

தலவாக்கலை கிரேட் வெஸ்டர்ன் ரேஞ்சில் அடையாளம் தெரியாத பெண்ணின் சடலம் பற்றிய பிரேதப் பரிசோதனை அறிக்கை மூன்று வாரங்களுக்குப் பின்னரே கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை கிரேட் வெஸ்டர்ன் மலைத்தொடரில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலத்தின் பிரேத பரிசோதனை நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் விசேட சட்ட வைத்தியர் சஞ்சய் வீரசேகரவினால் நடத்தப்பட்டது. தொடர்ச்சி P2

கிரேட்வெஸ்டர்ன்

## மலை உச்சியில் முகாமிட இடமளிக்க வேண்டாம்

■ டி.சந்ரு, செ.திவாகரன்

தலவாக்கலை - கிரேட்வெஸ்டர்ன் மலை உச்சியில் அனுமதியின்றி முகாமிட இடமளிக்க வேண்டாம் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, வன பாதுகாப்பு மற்றும் வனவிலங்கு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தொடர்ச்சி P2

## நாளை நடைமுறை பரீட்சை ஆரம்பம்

### தெளிவுபடுத்தல் குறித்து அழைக்கவும்

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையன் உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் (பயோ சிஸ்டம்ஸ் டெக்னோலஜி) நடைமுறைப் பரீட்சைகள், நாளை சனிக்கிழமை (05) ஆரம்பமாகவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தொடர்ச்சி P2



மல்லாவி குளத்தில்

## கொத்துக் கொத்தாக செத்து மிதக்கும் மீன்கள்

■ மு.தமிழ்ச்செல்வன்

மல்லாவி குளத்தில் விவசாயத்துக்கு நீர் விநியோகிக்கும் கால்வாயில்

இலட்சக்கணக்கான மீன் இறந்து மிதக்கின்றன.

தற்போது நிலவுகின்ற கடுமையான வெயில் காரணமாக குறித்த குளத்தின் நீர் தொடர்ச்சி P2



இனவாதத்தை கக்கிய கம்பன்பில

## சிங்களவர்கள் ஓடுவதை விரைவில் பார்ப்பார்

■ நிதர்ஷன் வினோத்



மீண்டும் இரத்த ஆறு ஓடும் என தமிழர்களை மிரட்டும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இனவாதத்தை கக்கியுள்ளமை அவரின் அரசியல் வங்குரோத்தை வெளிப்படுத்தியுள்ளது என்றும் சமஸ்டி வழங்கப்படா விட்டால் சிங்களவர் வெளிநாடுகளுக்கு ஓடுவதை கம்மன்பில விரைவில் பார்ப்பார் என்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்தார். தொடர்ச்சி P2

## அஜித் ரோஹனவின் மனு குறித்து செப்.4 பரிசீலனை

தென் மாகாணத்தில் இருந்து கிழக்கு மாகாணத்துக்கு தன்னை இடமாற்றம் செய்ததை எதிர்த்து சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை எதிர்வரும் செப்டம்பர் 4 ஆம் திகதி பரிசீலக்க உயர் நீதிமன்றம், வியாழக்கிழமை (03) தீரமானித்தது.

மற்றுமொரு மனு மீதான விசாரணை வியாழக்கிழமை (03) இடம்பெறவுள்ள காரணத்தால் இந்த மனு மீதான பரிசீலனை செப்டம்பர் 4ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதியரசர்கள் குழாம் அறிவித்தது. தொடர்ச்சி P2



## அஸ்வெசும முதல் தவணை இந்தவாரம் வழங்கப்படும்

அஸ்வெசும நலன்புரி நலன்கள் திட்டத்தின் முதல் தவணை இந்த வாரத்தில் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வரவுவைக்கப்படும் என்று நலன்புரி நன்மைகள் சபை உறுதி செய்துள்ளது. தொடர்ச்சி P2

## 1,400 இ.போ.ச பஸ்கள் விபத்தில் சிக்குகின்றன



### சபைக்கு வருடாந்தம் ரூ.800 மில். நட்டம்


வருடாந்தம் 1,400 இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் விபத்துக்குள்ளாவதாகவும் இ.போ.ச பஸ் சாரதிகளினால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக புதிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் மற்றும் பஸ்கள் இயக்கப்படாததால் சபைக்கு ஏற்படும் இழப்புகள் குறையும் என்று இலங்கை போக்குவரத்து சபை சுட்டிக்காட்டியுள்ளது. தொடர்ச்சி P2

## வவுனியா இரட்டை படுகொலை: பிரதான சந்தேக நபர் கைது

■ க. அகரன்

வவுனியா தோணிக்கல்லில் வீட்டுக்கு தீ வைத்து வாளால் வெட்டிய சம்பவத்தில் இருவர் மரணமடைந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## மனைவியை...

கனடாவின் மிகவும் பிரபலமான அரசியல்வாதிகளில் ஒருவரான 51 வயதான ட்ரூடோ, 2015 ஆம் ஆண்டு பிரதமராக பதவியேற்றார்.

அவரது மனைவி சோஃபி ட்ரூடோ ஒரு முன்னாள் மொடல் மற்றும் தொலைக்காட்சி தொகுப்பாளர் என்பதுடன், 2055ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்து கொண்டனர்

"பல அர்த்தமுள்ள மற்றும் கடினமான உரையாடல்களுக்கு" பின்னர் தாம் இந்த முடிவை எடுத்ததாக இன்ஸ்டாகிராமில் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருவரும் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் சட்டப்பூர்வ விவாகரத்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு 15 வயதான சேவியர், 14 வயதான எல்லா-கிரேஸ் மற்றும் 9 வயதான ஹாட்ரியன் என மூன்று குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தகக்து.

## கழிவகற்றல்...

இவ்விடயம் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர் விநியோகத்துக்கு மேலதிகமாக வேறு சில மாற்று நீர் ஆதாரங்களை பயன்படுத்தப்படும் போது அதற்கான பாவனை கட்டணமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பொது முகாமையாளர் அந்த தருணத்தில் தீர்மானிக்கும் மேலதிக கட்டணத்தை பாவனையாளர் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபையின் பொது முகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் வீட்டிற்கு சென்று கட்டணங்களை வசூலிப்பாராயின் அதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் தீர்மானிக்கப்படும் சேவை கட்டணத்தை செலுத்த வேண்டியதும் அவசியமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாளை நடைமுறை

ஒகஸ்ட் 5, 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் உள்ள 77 நிலையங்களில் நடைமுறைப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான அனுமதி அட்டைகள் குறித்த அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அவற்றை தபால் மூலம் அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மாணவர்கள் https://onlineexams.gov.lk/ என்ற இணையத்தளத்துக்குச் சென்று அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்ய முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை தொடர்பான தெளிவுபடுத்தல்கள் அல்லது தகவல்களுக்கு மாணவர்கள் 1911 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது 0112 784 208, 0112 784 537, 0112 786 616 அல்லது 0112 785 922 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக அதிகாரிகளை தொடர்பு கொள்ள முடியும் என திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## 1,400 இ.போ.ச பஸ்கள் விபத்தில் சிக்குகின்றன

வருடாந்தம் 1,400 இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் விபத்துக்குள்ளாவதாகவும் இ.போ.ச பஸ் சாரதிகளினால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக புதிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் மற்றும் பஸ்கள் இயக்கப்படாததால் சபைக்கு ஏற்படும் இழப்புகள் குறையும் என்று இலங்கை போக்குவரத்து சபை சுட்டிக்காட்டியுள்ளது. குறித்த பஸ்களை பழுதுபார்த்து மீள போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்காக வருடமொன்றுக்கு 465 மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக சபை குறிப்பிட்டுள்ளது.

# 13 குறித்து 15 க்குள் அறிவிக்க வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை ஒகஸ்ட் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எழுத்துமூலம் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்த பிரேரணையை ஜனாதிபதி ரணில், பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிக்கவுள்ள நிலையில், ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வ கட்சி மாநாட்டைக் மேற்கோள் காட்டி இந்தக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை செவ்வாய்க்கிழமை (01) சந்தித்து பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் பிற கரிசகைகளை வலியுறுத்தி 13ஆவது திருத்தத்தை அமல்படுத்துவது குறித்து கலந்துரையாடினர்.

இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்துக்கு முன்னர் தமிழ் கட்சி தலைவர்களை சந்தித்த ஜனாதிபதி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்துகலந்துரையாடினார்.

நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான விரிவான முன்மொழிவை இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைத்ததாக ஜனாதிபதி ரணில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொத்துக் கொத்தாக செத்து மிதக்கும் மீன்கள்

மட்டம் வெகுவாக குறைந்துள்ள நிலையில் மீன் இறந்திருக்கலாம் என்று பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மீன் குஞ்சுகள் சில மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு குளத்தில் விடப்பட்டவை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## சிங்களவர்கள் ஓடுவதை விரைவில் பார்ப்பார்

சமஷ்டி தீர்வை தொடர்ந்து வலியுறுத்தினால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என்று வழமையான பாணியில் இனவாதத்தை ஊடகங்களில் கம்மன்பில கக்கியுள்ளார் என தெரிவித்தார்.

தென்னிலங்கையில் குறிக்கப்பட்ட சிங்கள மக்களை தங்கள் பக்கம் திருப்பி தங்கள் பாராளுமன்ற கதிரைகளை தொடர்ந்தும் சூடாக்க இனவாத கருத்துக்களை கம்மன்பில உள்ளிட்ட சிலர் பயன்படுத்த முனைவதன் வெளிப்பாடே தமிழர்களின் அபிலாசைகளை, ஜனநாயக வெளிப்பாடுகளை இனவாதமாக சித்தரித்தல் என்று குறிப்பிட்டார்.

இது 1956 ஆண்டில் இருந்து இன்றுவரை இலங்கைத் தீவில் தொடர்கிறது. இதன் அறுவடையை 2019 ஆண்டின் பின்னர் நாட்டு மக்கள் அனைவரும் மிகப் பாரிய பொருளாதார பின்னடைவாக சந்தித்த கள யதார்த்தம் நாட்டை தொடர்ந்து மிகப் பாரிய பின்னடைவுக்குள் தள்ளியுள்ளது என்றார்.

நாடு மீண்டெழ முடியாத நிலைக்குள் பொருளாதாரம் முடங்கி விட்டது. பிச்சை எடுத்தும் இருக்கும் நிலபுலங்களை விற்றும் படம் காட்டுகிறார் ஜனாதிபதி ரணில். இந்த நிலையில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என தமிழர்களை மிரட்டுவது கம்மன்பிலவின் அரசியல் வங்குறோத்தை வெளிப்படுத்தியுள்ளது என சுட்டிக்காட்டினார்.

நாட்டின் இனப்பிரச்சனைக்கு சிங்கள ஆட்சியாளர் நிரந்தர தீர்வாக சமஸ்டியை கொடுக்க தவறினால் இன்னும் சிறிது காலத்தில் அன்று தமிழர்கள் சாரை சாரையாக வெளிநாடுகளுக்கு ஓடியது போல தென்னிலங்கையில் சிங்களவர் வெளியேறுவதை கம்மன்பில பார்ப்பார் என்றார்.

1952 ஆண்டில் இருந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் மக்கள் தங்களது அபிலாசையாக ஜனநாயக ரீதியாக சமஸ்டி தீர்வு வேண்டும் என்றே கோருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டதை நிராகரிக்கும் சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களின் எதேச்சதிகாரம் ஒட்டுமொத்த நாட்டையும் மீண்டெழ முடியாத நிலைக்கு தள்ளியுள்ளதை வெளிக்காட்டும் குறியீடாக தென்னிலங்கை சிங்களவர்கள் விரைவில் நாட்டை விட்டு ஓடுவார்கள் என்றார்.

## வவுனியா இரட்டை படுகொலை: பிரதான சந்தேக நபர் கைது

விண்ணப்பித்தவர்களில் 95 சதவீதம் பேர் அரச வங்கிகளில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் சபை அறிவித்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், ஏழைகள் மற்றும் மிகவும் ஏழ்மையானவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ், அஸ்வெசும நலன்புரி நன்மைகள் வழங்கப்படுவதுடன், ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பவுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் அடிப்படை நோக்கம் பொருளாதார ஸ்திரத்தன்மை தேவைப்படும் மக்களுக்குத் தேவையான பங்களிப்பை வழங்குவது என்று அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதேவேளை, சமுர்த்தி கொடுப்பனவை பெறும் குடும்பங்களில் அஸ்வெசும திட்டத்துக்கு தெரிவு செய்யப்படாதவர்களுக்கு தொடர்ந்தும் சமுர்த்தி கொடுப்பனவை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்கும் குடும்பங்களில் அஸ்வெசும திட்டத்திற்கு தகுதி பெறாத 3,93,097 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவை தொடர்ந்து வழங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டது.

அஸ்வெசும தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

## எரிவாயு சிலிண்டர் விலை அதிகரிக்கும்

உலக சந்தையில் ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவின் விலை 85 அமெரிக்க டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டுள்ள நிலையில், இந்த விலை உயர்வு உள்ளூர் சந்தையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரியவருகிறது.

உள்நாட்டு லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களுக்கான புதிய விலை இன்றையதினம் (04) அறிவிக்கப்படும் என்று முதித பீரிஸ் அறிவித்துள்ளார்.

எரிவாயு விலை சூத்திரத்தின் அடிப்படையில் லிட்ரோ எரிவாயு விலைகள் மாதாந்தம் 5 ஆம் திகதிகளில் திருத்தப்படுகின்ற நிலையில், இன்று (04) நள்ளிரவு முதல் அறிவிக்கப்படும் புதிய விலைகள் அமுலாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

3,186 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 12.5 கிலோ கிராம் சிலிண்டர் 2982 ரூபாயாகவும் 1,281 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 1,198 ரூபாயாகவும் 598 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர் 567 ரூபாயாகவும் கடந்த ஜூலை 4ஆம் திகதி குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் மீற்றர் இல்லாத ஓட்டோகளை அகற்றினர்

யாழ் மாவட்டத்தில் வாடகைக்கு செலுத்தும் ஓட்டோகளுக்கு கட்டணமானி பொருத்தாமையினால் ஓட்டோகளுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யாழ் மாவட்டத்தில் ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டணமானி பொருத்தாக ஓட்டோகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## டொலரும் தங்கமும் விலை குறைந்தன

கடந்த ஜூலை மாதம் 4ஆம் திகதியன்று அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 299 ரூபாய் 87 சதமாகவும் விற்பனை விலை 314 ரூபாய் 98 சதமாகவும் பதிவாகியிருந்தது.

எனினும், குறித்த மாதத்தின் இறுதிப் பகுதியில் டொலரின் கொள்வனவு விலை 329 ரூபாய் வரை அதிகரித்திருந்த நிலையில், இந்த மாதத்தில் முதல் பகுதியில் டொலரின் பெறுமதி சரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

\உள்ளூர் தங்க சந்தையில் தங்கத்தின் விலை வியாழக்கிழமை (03) சற்று குறைந்துள்ளதாக உள்ளூர் தங்க வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஒரு பவுண் 22 கரட் தங்கம் 164 ஆயிரம் ரூபாயாகவும் ஒரு பவுண் 24 கரட் தங்கம் 179 ஆயிரம் ரூபாயாகவும் குறைந்துள்ளது.

இரு தினங்களுக்கு முன்னர் ஒரு பவுண் 22 கரட் தங்கம் 168 ஆயிரம் ரூபாயாகவும்ஒரு பவுண் 24 கரட் தங்கம் 183 ஆயிரம் ரூபாயாகவும் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சடலத்தின் இடது கையில் 'மதுசங்க'

உயிரிழந்த பெண்ணின் உடல் உறுப்புகள் மேலும் பரிசோதிக்கப்பட வேண்டியதன் காரணமாக பிரேத பரிசோதனை அறிக்கை மூன்று வாரங்களில் வெளியிடப்படும் என பிரேத பரிசோதனையை மேற்கொண்ட நிபுணர் சட்ட வைத்தியர் தெரிவித்ததாக லிந்துலை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்த பெண் 40-45 வயதுடைய பெண் எனவும், இடது கையில் மதுசங்க என்ற பெயர் பச்சை குத்தியிருந்ததாகவும் பிரேத பரிசோதனையில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் லிந்துலை பொலிஸாருக்கு வழங்குமாறும், பெண்ணின் சடலம் கண்டெடுக்கப்பட்ட கிரேட் வெஸ்டர்ன் கீழ் பகுதியில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

மலை உச்சியில் பெண்ணொருவரின் சடலம் இருப்பதாக கிரேட் வெஸ்டர்ன் மலைத்தொடரில் முகாமிட வந்த சிலர் தலவாக்கலை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் பெண்ணொருவரின் சடலம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிரேட் வெஸ்டர்ன் மலைப்பகுதியில் மர்மமான முறையில் உயிரிழந்த பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதையடுத்து, கிரேட் வெஸ்டர்ன் காப்புக்காட்டுக்குள் நுழைவதையும் மலை உச்சியில் முகாமிடுவதையும் தடை செய்யுமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## மலை உச்சியில் முகாமிட இடமளிக்க வேண்டாம்

இனம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்று கல்கந்தை மலை உச்சி சரிவு பகுதியில் காணப்பட்டமை தொடர்பில் லிந்துலை மற்றும் தலவாக்கலை பொலிஸாருக்கு 1 ஆம் திகதி மாலை தகவல் கிடைத்துள்ளது .

இதனையடுத்து இனந்தெரியாத பெண்ணின் சடலம் இராணுவத்தின் உதவியுடன் புதன்கிழமை (02) மாலை மீட்க்கப்பட்டுள்ளதை அடுத்து நுவரெலியா மாவட்ட செயலாளர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

பெண்ணின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்புமாறு நுவரெலியா பதில் நீதவான் ஜே. அம்பகஹவத்த லிந்துல காவல்துறையினருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதுடன் இந்த சம்பவத்தில் சடலமாக மீட்க்கப்பட்ட பெண் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுத்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது

குறித்த பெண் ஒருவர் அல்லது சில தரப்பினருடன் மலை உச்சியை அடைந்துள்ளதாகவும், சில காரணங்களால் அவர் உயிர் இழந்ததையடுத்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, கிரேட்வெஸ்டர்ன் மலை உச்சியில் இருந்து இந்த பெண்ணின் சடலத்தை எடுத்துவரச் சென்ற இராணுவ கோப்ரல் ஒருவரும் திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## அஜித் ரோஹணவின் மனு குறித்து செப்.4 பரிசீலனை

பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸின் வேண்டுகோளின் பேரில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மனுதாரர், நியாயமான காரணங்கள் இன்றி இந்த இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்னுமொரு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு பதவி உயர்வு வழங்கும் வகையில் தான் துன்புறுத்தப்படுவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்துக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி, தன்னை இடமாற்றம் செய்யுமாறு பொலிஸ்மா அதிபரின் கடிதத்தில் உள்ள பரிந்துரை சட்டவிரோதமானது என அறிவிக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறும் அவர் மனுவில் கோரியுள்ளார்.

# “விவசாய நிலங்களை அழிக்காதே”

## பூநகரியில் சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக மக்கள் போராட்டம்

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளியில் அமைக்கப்படவுள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக பொது மக்கள் வியாழக்கிழமை (03) ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

வலைப்பாடு, கிராஞ்சி, வேரவில் கிராம மக்களும், மக்கள் அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்

வலைப்பாடுஇ கிராஞ்சி மற்றும் வேரவில் ஆகிய மூன்று கிராம மக்களும் ஒன்றாக இணைந்து பொன்னாவெளி எனும் பழமைவாய்ந்த கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலைக்காக பல ஏக்கர் காணியை சுவீகரித்து பல மீற்றர்கள் ஆழத்தில் சீமெந்து தொழிற்சாலைக்கான கல் அகழ்வு



பணிகள் மேற்கொள்வதற்காக ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெற்று வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

விவசாய நிலங்களை அழிக்காதே, ஏழை மக்களின் வளங்களை சுரண்டி பிழைக்காதே, சுன்னக்கல் அகழ்வு வேண்டாம், டோக்கியோ சீமெந்து கம்பனியே வெளியே போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும், கோசங்களையும் எழுப்பியவாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

### அகில இலங்கை தமிழ் மொழித்தின

# சம்மாந்துறை வலய விழா சிறப்பாக இடம்பெற்றது

வி.ரி.சகாதேவராஜா

அகில இலங்கை தமிழ் மொழித்தின சம்மாந்துறை வலய மட்ட தமிழ் மொழித்தின நிகழ்வு சம்மாந்துறை அல்மர்ஜான் உயர்தரப் பாடசாலையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.ஜனோபர் தலைமையில் ஆரம்ப விழா நடந்தேறியது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். கௌரவ



அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏஎல்.அப்துல் மஜீட் மற்றும்

சிறப்பதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தனர்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், மாணவர்கள் உட்பட பல்துறைசார் நடுவர்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

ஐம்பது போட்டிகளில் முதலிடத்தை சம்மாந்துறை கோட்டமும் இரண்டாம் இடத்தை நாவிதன்வெளி கோட்டமும் மூன்றாம் இடத்தை இறக்காமம் கோட்டமும் பெற்றுக் கொண்டு மாவட்ட மட்ட போட்டிக்கு தெரிவாகின.

# மாணவன் துஷ்பிரயோகம்: ஆசிரியர் தலைமறைவு

பாறுக் ஷிஹான்

பாடசாலை ஒன்றில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான மாணவன் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர் தலைமைறைவாகியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பகுதியில் உள்ள பிரபல அரச பாடசாலை ஒன்றில் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி ஆசிரியரால் விளையாட்டு அறையில் வைத்து பாலியல் ரீதியாக மாணவன் துஸ்பிரயோக முயற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அதிபரிடம் முறையிடப்பட்டிருந்தது.

சம்பவம் இடம்பெற்று மறுநாள் பாதிக்கப்பட்ட குறித்த மாணவன் அதிபரிடம் முறையிட்டு ள்ளதுடன் இரு வாரங்கள் கழிந்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனை அடுத்து இச் சம்பவம் குறித்து நிந்தவூர் பொலிஸார் குறித்த மாணவனிடம் வாக்குமூலம் ஒன்றை இரு தடவை பெற்று சென்றுள்ளதுடன் மாணவனை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயற்சி செய்ததாக கூறப்படும் சந்தேக நபரான ஆசிரியர் தொடர்ந்தும் தலைமறைவாகி உள்ளதாக மாணவனின் தாயார் குறிப்பிட்டார்.

# பரதநாட்டிய அரங்கேற்றம்



தர்மலிங்கம் பரமசிவம் மற்றும் சித்ரா தர்மலிங்கம் தம்பதியின் புதல்வியும், ஸ்ரீமதி சித்ரா தர்மலிங்கத்தின் மாணவியுமான செல்வி தியானா தர்மலிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் கொழும்பு- 7 மியூசியஸ் கல்லூரி கலையரங்கில் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
கனடாவிலிருந்து வருகை தந்து தாய் மண்ணில் அரங்கேற காத்திருக்கும் இந்த பரதநாட்டிய அரங்கேற்றத்தை காண வருமாறு கலைஞர்கள், ஆசிரியர்கள், கலாரசிகர்கள், நண்பர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# முச்சக்கரவண்டி ஓட்டிய இருவருக்கு அபராதம்


ரஞ்சித் ராஜபக்ஷ

முச்சக்கர வண்டிகளை ஓட்டிச் சென்று அதன் காட்சிகளை சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டிகளை ஆபத்தான முறையில் ஓட்டி சமூக வலைத்தளங்களில் காட்சிகளை வெளியிட்ட இரு இளைஞர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் ஹட்டன் மல்லியப்பு பகுதியில் இரண்டு முச்சக்கரவண்டிகளை ஆபத்தான முறையில் ஓட்டிச் சென்று காட்சிகளை பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட இரு இளைஞர்கள் ஹட்டன் பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளினால் (03) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சமூக வலைதளங்களில் (டிக்-டாக்) பரவி வரும் வீடியோவை முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்ற இளைஞர்கள் பதிவேற்றம் செய்து, அந்த காட்சிகளை பதிவிறக்கம்



செய்து, முச்சக்கரவண்டியின் பதிவு எண்கள் மற்றும் இரண்டு முச்சக்கர வண்டிகள் மற்றும் இரு இளைஞர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் ஹட்டன் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் 20-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் ஹட்டன் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் நிபுன தெஹிகம மற்றும் ஹட்டன் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன ஆகியோரின் பணிப்புரையின் பிரகாரம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த உள்ளனர்.

# நினைவேந்தல்



1989 ம் ஆண்டு ஒகஸ்ட் 2ம் திகதி வல்வெட்டித்துறை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இந்திய இராணுவத்தால் 63 தமிழ் பொதுமக்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டனர்.

அவர்களை நினைவுகூரும் நினைவேந்தல் வல்வெட்டித்துறையில் நடைபெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி, அக வணக்கத்துடன் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதில் படுகொலை செய்யப்பட்டவர்களது உறவுகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், த.தே.ம.மு பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் முக்கியஸ்தர் காண்டீபன், கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.


**கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2023 ஜூலை மாதம் மாதம் 4 ஆம் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனியின் பழைய பெயர்:** வில்பா்ல் (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் புதிய பெயர்:** தக்ஷன் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் இலக்கம்:** பீ வீ 00225193
**பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:**
தளம் 5, பார்க்வே கட்டிடம், இல. 48, பார்க் தெரு, கொழும்பு 02.

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**


# கடலட்டைகள் 2 ஆயிரம் மீட்பு



எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னாரில் இருந்து அனுமதிப்பத்திரம் இன்றி குஞ்சு கடலட்டைகளை கொண்டு சென்ற இருவர் வியாழக்கிழமை(03) காலை மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள சோதனை சாவடியில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குஞ்சு கடலட்டைகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன.

சாவடியில் வைத்து இராணுவத்தினரால் குறித்த வாகனம் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது குறித்த கடலட்டைகள் அனுமதிப்பத்திரம் இன்றி கொண்டு செல்லப்பட்ட மை தெரிய வந்துள்ளது.

தற்போது கைது செய்யப்பட்ட பல்லவராயன் கட்டு பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட கடலட்டைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தந்திரமான செயலா?

செ.தி.பெருமாள்

ஹட்டன் -நோட்டன் நகருக்கு அருகில் உள்ள எபடின் பகுதியில் புதிதாக மதுபான கடை அமைக்க 14 நாட்கள் அவகாசம் கொடுத்து மக்கள் தீர்மானம் பெற்று கொள்ள திகதி இடப்படாத கடிதம் ஒன்று அம்பகமுவ பிரதேச செயலாளர் ஊடாக ஒட்டப்பட்டு உள்ளது.

இவ்வாறு மக்கள் பார்வைக்காக ஒட்டப்பட்டுள்ள கடிதத்தில் திகதி இல்லாமை சம்பந்தமாக அம்பகமுவ பிரதேச செயலாளருக்கு மக்கள் அறிவித்தது உள்ளனர். இது கலால் திணைக்களத்தின் ஒரு தந்திரமான செயலாக இருக்கும் என மக்கள் கூறுகின்றனர்.

தற்போது நோட்டன் நகரில் ஒரு மதுபான சாலை உள்ளது எனவும், மேலும் ஒரு மதுபானசாலை வேண்டாம் எனவும் இது அப் பகுதியில் உள்ள தோட்ட தொழிலாளர்களையும் கிராம மக்களையும் இலக்கு வைத்து ஆரம்பிக்க பட உள்ளது என அப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது குறித்து சம்பந்தப்பட்ட பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவரிடம் திகதி இல்லாமல் கடிதம் ஒட்டப் பட்டுள்ளது சம்பந்தமாக கேட்ட போது அவர் கூறுகையில் தமக்கு இது குறித்து புகார் கடிதம் பல வந்துள்ளன எனவும் திகதி இடம்பெற்ற கடிதம் கிராம உத்தியோகத்தர் ஒருவர் வெகு விரைவில் ஒட்டுவார் அதனைத் தொடர்ந்து அப் பகுதியில் உள்ள மக்கள் தங்களின் எதிர்ப்பை கடிதம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என கூறினார்.

# படை வீரர் உட்பட இருவர் கைது

அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற திருவிழா நிகழ்வின் போது பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த அம்பாறை பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவின் உப பொலிஸ் உத்தியோஸ்தர் மற்றும் பொலிஸ் உத்தியோஸ்தரை தாக்கிய படை வீரரையும் அவரது நண்பர்கள் இருவரையும் அம்பாறை பொலிஸார் முதலாம் திகதி கைது செய்துள்ளனர்.

திருவிழா பூமியில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற முறுகல் நிலைமையை சமரசம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் மீது மதுபோதையிலிருந்த குழுவினர் தாக்கியுள்ளனர்.

பலத்த காயங்களுக்குள்ளான இரு பொலிஸ் உத்தியோஸ்தர்களும் சிகிச்சைக்காக அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இந்த தாக்குதல் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டிருந்த அம்பாறை பொலிஸார் அம்பாறை சுதுவெல பகுதியில் 32 வயதுடைய படை வீரரையும் அவரது நண்பர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர்.


# கம்பஹா பிரதேச சபை

**வாடகை அடிப்படையில் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல்**

**கொள்முதல் இலக்கம் – DS/03/2023**

கம்பஹா பிரதேச சபை அலுவலக வேலைகளுக்காக 2023.12.31 ஆம் திகதி வரை 4றுனு வகையான டபல் கெப் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிபெற்ற வழுங்குனர்களிடம் இருந்து விலைமனு கோரப்படுகின்றன.

02. அது சம்பந்தமான விபரங்களை www.gampha.ps.gov.lk என்ற கம்பஹா பிரதேச சபை இனைய தளத்தில் அனுகுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

03. குறிப்பிடப்பட்ட வாடகை வண்டியானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் இருத்தல் வேண்டும்.

• 2015 – 2020 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட உற்பத்தி செய்யப்பட்ட 2450 CC – 3000 CC இடையே எஞ்சின் திறன் கொண்ட உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமம் உடைய மாடலாக இருத்தல் வேண்டும்.

04. 2023.08.03 ஆம் திகதி முதல் 2023.08.17 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணி முதல் பி.ப 03.00 மணி வரையுள்ள காலப்பகுதியில் மீள் வழங்கப்படாத ரூ. 1000.00 (ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் அபிவிருத்திப் பிரிவிலிருந்து ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மேலதிக விபரங்களுக்கு 033-2220145 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

05. ஏலப் பாதுகாப்பு தொகையாக ரூ. 25,000.00 (இருபத்தைந்தாயிரம் ரூபா) வை கம்பஹா பிரதேச சபையில் வைப்புச் செய்யப்பட்டு மேற்படி ரசீதுகள் சீல் செய்யப்பட்ட விலைப்பத்திரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏலங்கள் அசல் மற்றும் நகல் ஆக தயார்செய்து 2023.08.18 ஆம் திகதி அன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு “பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட” என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவும். அசல் மற்றும் நகல் கடிதவுறையில் இட்டு கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் “வாடகை அடிப்படையில் கெப் ரக வண்டி பெற்றுக்கொள்வதற்கான விலைமனு கோரல்” என குறிப்பிடப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனுக்கள் கிராகரிக்கப்படும். விலை மனுக் கோரல்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் கம்பஹா பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் வருகைத்தந்திருக்கும் ஏலதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.

07. இந்த ஏலங்களை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றத்தின் கொள்முதல் குழுவிடம் உள்ளது.

எஸ்.ஏ.என்.பீ. சுரவீர
பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள், கடமைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரி கம்பஹா பிரதேச சபை, மிரிஸ்வத்த, முதுன்கொட.
**2023.08.03**

# ஏமாற்று பேர்வழிகளிடம் சிக்கிக் கொள்ளாதீர்கள்

கண்ணயர்ந்து கண் விழிக்கும் முன்னர் பலரும் தங்களுடைய கைவரிசையை மிகக் கச்சிதமாக அரங்கேற்றிவிட்டு, அடுத்த கைவரிசையை காட்ட சென்று விடுகின்றனர். இழந்தவர்கள், அதனை மீளப் பெற்றுக்கொள்வதற்கு பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

பொதுப் போக்குவரத்தை பயன்படுத்துவோர் தங்களுடைய பெறுமதியான பொருட்களையும், ஆவணங்களையும், பணத்தையும் கவனமாக வைத்துக்கொள்ளுமாறு பொலிஸாரினால் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. பஸ்ஸின் சாரதியும், நடத்துனரும் அவ்வப்போது அறிவுறுத்துவர்.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறு வர்த்தகர்களும் பயணிகளை அறிவுறுத்துவர். எனினும், ஒவ்வொருநாளும் ஏதோவொன்றை பயணிகள் இழந்துவிடுகின்றனர். கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றி விழித்திருந்தாலும், கண்களுக்குள் விரலைவிட்டு ஆட்டிவிடுகின்றனர்.

இதற்கிடையே மிக நாசுக்காக பேசி பல இட்சம் ரூபாயை பலரும் கறந்துவிடுகின்றனர். வெளிநாட்டு மோகத்தில் மூழ்கியிருப்போர் பெருந்தொகையை இழந்துவிடுகின்றனர். இல்லையேல் இறுதியில் சிக்கிக்கொள்கின்றனர். அவ்வாறான சம்பவங்கள் ஏராளம் நாட்டில் நடைபெறுகின்றன.

பெண் பார்க்கச் சென்றவரிடம் வெளிநாட்டு மோகத்தை காண்பித்து அவரிடமிருந்து 18 இலட்சம் ரூபாயை கறந்த சம்பவம் வடக்கில் இடம்பெற்றுள்ளது. ஏமாற்று கைவரிசையை காண்பித்த பெண்ணொருவர் சிக்கியுள்ளார். அவர், இவ்வாறு பலரை ஏமாற்றியுள்ளமை விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, போலி ஆவணங்களை பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு விமானங்களில் ஊடாக செல்லமுயன்று சிக்கிக்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்துடன், கடல்மார்க்கமாக சட்டவிரோதமான முறையில், இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை காரணங்காட்டி, கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் சென்றாலும், இந்தியா அவர்களை ஏற்றுக்கொண்டு, அகதி முகாம்களில் தங்கவைத்து கவனித்துக் கொள்கின்றது. அவுஸ்திரேலியா, பலரையும் திருப்பியனுப்பியுள்ளது.

சட்டவிரோதமான படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வரவேண்டாம். அவ்வாறு வந்தால் ஒருபோதும் புகலிடம் கிடைக்காது என அவுஸ்திரேலியா எச்சரிக்கை விடுத்துள்ளது. இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற எட்டு சம்பவங்களில் 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவித்துள்ளது. இதேவேளை, கடந்த வருடம் 1,532 பேர் சிக்கியுள்ளனர் என்றும் அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகுகளின் ஊடாக இந்தியாவுக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. தங்களிடம் இருக்கும் பணத்தை இடைத்தரகர்களிடம் வழங்கியே இவ்வாறான ஆபத்தான பயணத்தை அவர்கள் மேற்கொள்கின்றனர். மனித கடத்தல்களில் ஈடுபடும் தரகர்கள் ரொக்கமாக கறந்துவிட்டு, மணல் திட்டுகளில் அநாதைகளாக விட்டுவிடுகின்றனர்.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் போது அவதானமாக இருக்கவேண்டும். வெளிநாட்டு ஆசைகளை ஊட்டுவோரிடம் எச்சரிக்கையாக இருப்பதே சிறந்தது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்கு உரிய காரியங்களை மட்டும் செய்து, சமூகசேவைகள் எதையும் செய்யாதவர், ஆன்மிகம் பற்றிப் பேசுவதில் ஏதுபயன்?

நற்செயல் புரிந்தவர்கள் மௌனமாகி விடுகின்றனர். ஆனால், எதுவுமே செய்யாதவர்கள், பொதுநலன் பற்றிப் பேசுவது வேடிக்கை. பொய்யான பிரசாரங்களை அள்ளி வீசுபவர்கள் சுயநலவாதிகள். இவர்களைக் கண்டுகொள்ள வேண்டாம். தேசத்துக்கு தியாகம் செய்கின்றோம் என்று சொல்லியே தலைவராகி விடுகின்றவர்கள், சாதாரண தொழிலாளி செய்கின்ற பணிகளைக் கூட செய்கின்றார்களா?

கஸ்டப்பட்டே வாழ வேண்டும் என்ற விதி நிரந்தரமாகிவிடக்கூடாது. எனினும் இன்னமும் ஏழ்மை முடிவுக்கு வரவே இல்லை.

விலைவாசிகள் அதிகரிக்க இன்று பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. சில பணக்காரர்கள் ஏழைகளுக்கு உதவிபுரிந்துள்ளார்கள். ஆனால், அவர்கள் அதை வெளியில் காட்டிக்கொள்வதில்லை. இவர்களைப் போன்றவர்கள் இரக்கம் செலுத்துவதில் உறுதியானவர்கள். சொல்லாமல் செய்வோர் நல்லோர்.

தொண்டு நிறுவனங்களுக்கு பலவிதமான உதவிகளை சாதாரண மக்களும் நல்குகின்றனர். வியாபாரிகள் பொருட்களைப் பதுக்காமல் இருந்தாலே போதும் அதுவே பெரிய உதவி.

பேராசையுடன் பொருட்களைத் தேடுபவர்கள், மற்றவர்களின் நிலைகளை உணரவேண்டும். எல்லோரும் வாழவேண்டும். வையகம் எமக்கானது மட்டுமல்ல; உணர்வார்களா?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கழிவு நீரால் பயணிகள் அசௌகரியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் மத்திய பேருந்து நிலையத்தின் மலசல கூடத்தின் கழிவு நீர் வெளியேறி பயணிகள் பயன்படுத்தும் வெளி இடங்களில் நிற்பதனால் பயணிகள் கடும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பேருந்து நிலையம் கடந்த 28.03.2023 அன்று திறந்து வைக்கப்பட்டது. மலசல கூடம்,குளியலறை என பல வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையம் ஐந்து மாதங்களில் முகம் சுழிக்குமளவுக்கு மாறிவிட்டது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சில பயணிகளின் பொறுப்பற்ற பயன்பாடு மற்றும் முறையான பராமரிப்பு இல்லாமை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மலசல கூடத்தின் கழிவு நீர் பயணிகளின் பாதைகளிலும் அவர்கள் பயன்படுத்தும் இடங்களிலும் வெளியேறி காணப்படுவதனாலும், மலசல கூடங்கள் முறையான பராமரிப்பு இன்மையாலும் அவை சுகாதாரமற்ற முறையில் காணப்படுகிறது என பயணிகள் தெரிவிக்கின்றனர்.

மு.தமிழ்ச்செல்வன்

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின்12:

# இராமநாதனும் அருணாசலமும்: எதிரும் புதிரும்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஈழத்தமிழ்த் தேசிய அரசியலில் பொன்னம்பலம் இராமநாதன் அறியப்பட்டளவு பொன்னம்பலம் அருணாசலம் அறியப்படவில்லை. அது ஆச்சரியமானதல்ல. அரசியல் தளத்தில் எதிரும் புதிருமான மனிதர்களாக இருவரும் இயங்கினர். இருவரது அக்கறைகளும் வேறுவேறாக இருந்தன. இவ்விருவரது செயல்களையும் அதற்கான இயங்கியலையும் விளங்கிக் கொள்ளவது சீரழிந்து போயிருக்கின்ற தமிழ்த்தேசிய அரசியல் செல்நெறியின் முதற்கோணலையும் அதற்கு வழியமைத்த குறுந்தேசியப் பார்வையையும் விளங்கிக்கொள்ள உதவும்.

பிரித்தானிய கொலனியாதிக்கத்தின் கீழ் இலங்கையில் கொழும்பை மையமாகக் கொண்ட ஒரு புதிய தமிழ் மேட்டுக்குடியினர் தோற்றம் பெற்றனர். புறரித்தானியரால் ஊக்குவிக்கப்பட்ட புதிய விவசாய உற்பத்திகளின் விளைவாக தென்னிலங்கையிலும் தென்னிந்தியாவிலும் வணிகத்தில் ஈடுபட்ட தமிழர்கள் இந்த மேட்டுக்குடிகளாகினர். இவர்களது பிரதான வர்த்தகப் பண்டமாக புகையிலை இருந்தது. இவர்கள் கொழும்பில் சொத்துக்களில் முதலிட்டனர். வீடுகளையும் நிலங்களையும் வாங்கினர். இதில் குறிப்பிட்ட ஒரு தொகுதியினர் உயர்கல்வியில் கவனம் செலுத்தினர். இதன் விளைவாகக் கொழும்பை மையமாகக் கொண்ட ஒரு தமிழ் மேட்டுக்குடி வர்க்கம் தோற்றம் பெற்றது. இவ்வாறு தோற்றம் பெற்றவர்களே இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவோராக இருந்தனர். இதில் குறிப்பிடத்தக்க பலரில் இராமநாதனும் அருணாசலமும் முக்கியமானோர்.

இலங்கையின் வடபுலத்தில் வேளாள சாதியினர் மேனிலையில் இருந்தனர். தாழ்த்தப்பட்ட சாதியினருக்குக், கல்விக்கும் சமூக மேம்பாட்டுக்குமான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. இவை திட்டமிட்டு நடந்தன. பிரித்தானியர் பாடசாலைகளை உருவாக்கி கல்வி வாய்ப்புகளை வழங்கியிருந்த போதும் யாழ்ப்பாணத்தில் நிலவிவந்த இறுக்கமான சாதிய ஒடுக்குமுறை மேட்டுக்குடி அல்லாதோருக்கு வாய்ப்புக்களை மறுத்தது. இந்தப் பின்புலத்திலேயே தமிழர் அரசியலைக் கணிக்க வேண்டியுள்ளது. தமிழர் அரசியல் என்பது அடிப்படையில் இரண்டு அம்சங்களைக் கொண்டிருந்தது. முதலாவது, அது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டிருந்தது. இதுவே இன்றும் 'யாழ்மையவாதம்' என்று அழைக்கப்படுகிறது. இரண்டாவது, அது தமிழ்ச் சைவ வேளாள நலன்களையே வற்புறுத்தியது. இவ்விரு பண்புகளும் இன்றும் தமிழ்த் தேசிய அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கவியலும்.

இப்பண்புகளுடன் தோற்றம் பெற்ற தமிழர் அரசியல் கோளாறுடையதாகவே இருந்தது. அரசியற்பரப்பில் தமிழரின் அரசியலின் தலைமை கொழும்பைத் தளமாகக் கொண்டிருந்தது. 'அப்புக்காத்து அரசியலின்' தொடக்கங்கள் வேர்விடத் தொடங்கியிருந்தன. 'பிரித்தானியருடன் ஆங்கிலத்தில் சரிசமமாகக் கதைத்து தமிழர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பது' என்ற கதையாடல் அப்போது செல்வாக்குச் செலுத்தியது. இப்போது ஒரு நூற்றாண்டு கழித்து பிரித்தானியரின் இடத்தை சர்வதேச சமூகம் நிரப்பியுள்ளது, ஆனால் அதே கதையாடல் தொடர்கிறது என்பது தான் அவலமான யதார்த்தம்.

இவ்வகைப்பட்டதான தமிழர் அரசியல் இயங்கியது. இன்றும் இயங்குகிறது. கொழும்பைத் தளமாகக் கொண்ட தலைமை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தனது அதிகாரத் தளத்திற்கு வெளியிலிருந்த பெரும்பான்மையான தமிழரின் நலன்கள பற்றியோ அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் பற்றியோ எதுவித கவனமும் இருக்கவில்லை. யாழ்மையவாத சிந்தனை 'தமிழர்' என்ற பொது அடையாளத்தை நோக்கி நகர்வதை அனுமதிக்கவில்லை.

இலங்கையின் பிற பகுதிகளில் இருந்த சாதிய ஒடுக்குமுறைகளை விட யாழ்க் குடாநாட்டில் சாதிய வேறுபாடுகளும் ஒடுக்குமுறைகளும் மிகவும் ஆழமானதாகவும் அன்றாட வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்ததாகவும் இருந்தது. எனவே தமிழருக்கான அடையாளம் என்ற தேவையோ, தமிழ்த்தேசியம் என்ற கோஷமோ தேவைப்பட்டிருக்கவில்லை. 1920களில் தமிழ் மேட்டுக்குடிகள் சிங்கள பௌத்த பேரினவாதத்தை நேரடியாக எதிர்கொள்ளும் வரை தமிழ்த்தேசிய இன அடையாளம் என்பது குறித்து தமிழ் மேட்டுக்குடிகளும் அவர்தம் அரசியல் பிரதிநிதிகளும் சிந்திந்திருக்கவில்லை.

இவ்விடத்தில் இன்னொரு முக்கியமான செய்தியையும் சொல்லியாக வேண்டும். வடக்கிலிருந்த தமிழரே முதல்முதலாக முற்போக்கான அரசியல் சிந்தனையை வெளிப்படுத்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. படித்த தமிழ் நடுத்தர வர்க்கத்தினரும் சில மேட்டுக்குடியினரும் இணைந்து 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இந்திய விடுதலைப் போராட்டம் தந்த உற்சாகம் இதற்கு முக்கிய காரணியாகியது. இலங்கைக்குச் சுயராச்சியம் கோரிய முதலாவது அமைப்பு என்ற வகையில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முக்கியமானது.

1915 சிங்கள-முஸ்லீம் கலவரத்தைத் தொடர்ந்த பொன்னம்பலம் இராமநாதனின் நடத்தை மிகுந்த விமர்சனத்துக்கு உரியது. அவரது நடத்தை யாழ் சைவ வெள்ளாள உயர்குடியின் பிரிதிநிதியாக இராமநாதன் இருந்தார் என்பதை உறுதிப்படுத்தியது. இதேவேளை இராமநாதனில் இருந்து மிகவும் வேறுபட்டவராகவும் உண்மையான தேசியவாதியாகவும் இருந்தவர் பொன்னம்பலம் அருணாசலம். மலையகத் தமிழருக்காகவும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர் என்ற வகையில் இலங்கையின் தொழிலாளர் வரலாற்றில் காத்திரமான பங்களிப்பை வழங்கியவர் அருணாசலம்.

1915ம் ஆண்டு கலவரத்தைத் தொடர்ந்து 'அரசியல் சீர்திருத்தங்கள் அவசியம் என்றும் அவை அவசரமானவை என்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தியவர் அருணாசலம். 1917ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 2ம் திகதி இலங்கைத் தேசிய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் 'எமது அரசியல் தேவைகள்' என்ற தலைப்பில் அருணாசலம் ஆற்றிய உரை முக்கியமானது. அவர் அதில் இலங்கையர் அனைவரதும் விடுதலை பற்றிப் பேசினார். உழைக்கும் மக்களின் முக்கியமான பங்களிப்புப் பற்றிப் பேசினார். இக்காலப்பகுதியில் இவரது இந்த உரை மிகுந்த புரட்சிகரமானதாக இருந்தது. இக்காலப்பகுதியிலேயே சர்வசன வாக்குரிமையின் அவசியம் குறித்து தொடர்ச்சியாகப் பேசியும் எழுதியும் வந்தவர் அருணாசலம்.

டொனமூர் ஆணைக்குழு சர்வசன வாக்குரிமையை முன்மொழிந்தபோது அதை முழுமையாக எதிர்த்தவர் இராமநாதன். ஆவர் படித்த ஆண்களுக்கு மட்டுமே வாக்குரிமை இருக்க வேண்டும் என்றும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். இது மறுக்கப்பட்ட போது, படித்த பெண்கட்கு மட்டுமே வாக்குரிமை இருக்க வேண்டும் என்றுவைத்திலிங்கம் துரைசாமியால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை பொன்னம்பலம் இராமநாதன் முழு மனதோடு ஆமோதித்தார்.

இராமநாதனின் இந்த நிலைப்பாட்டுக்குக் காரணம், யாழ்ப்பாணச் சைவ வேளாளப் பரம்பரையினரது நலன்கள் குறித்த அவரது அக்கறையே. இதனால் தான் அவர் கல்வியையும் ஆண் பாலினராய் இருப்பதையும் வாக்களிப்பதற்கான தகுதிகளாக்கினார். அக்காலப்பகுதியில் படித்த பெண்களிற் சன விகிதப்படி கூடிய பகுதியினர் அன்று கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். இவ்விதமான மிகக்குறுகலான பார்வையே இராமநாதனுடையது.

இதற்கு முற்றிலும் மாறாகப் பரந்து தளத்தில் விரிந்த சிந்தனையோடு செயல்பட்டவர் அருணாசலம். 1919இல் இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் முதல் தலைவராகவும் இருந்தார். இலங்கையில் தோற்றுவிக்கப்பட்ட முதலாவது தொழிலாளர் சங்கம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது பரந்த நோக்குக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு 1919 ஆகஸ்டில் அவர் எழுதி வெளியிட்ட 'ஊயளந கழச ஊழுளெவவைரவழையெட சுநகழசஅ in ஊநலடழn' என்ற பிரசுரமாகும். இதில் இலங்கையர் அனைவரதும் சுயகௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அனைத்து இலங்கையரும் வேறுபாடின்றி நடாத்தப்பட வேண்டுமென்றும் கோருகின்றார்.

அருணாசலம் தொடக்கத்திற் தாராண்மைக் கட்சியின் அனுதாபியாகத் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கினாலும் பின்னர் தொழிற் கட்சியின் கருத்துக்கள் அவரைக் கவர்ந்தன. தொழிலாளர் தமது உரிமைகட்காகக் போராட்டச் சங்கங்கள் அமைப்பது தொடங்கிப் பிற்காலத்தில் சர்வசன வாக்குரிமை போன்றனவற்றுக்கும் ஆதரவாக நின்ற அளவில் அவர், தனது சகோதரர் பொன்னம்பலம் இராமநாதனின் எதிர்த் துருவம். இருபதாம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தகால அரசியல் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் அன்றைய அரசியல் தலைவர்களிடையே இலங்கைத் தேசியக் கண்ணோட்டத்திற்கு சிந்தித்தவர்களில் அவருக்குச் சிறப்பான இடம் உண்டு.

பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரின் எழுத்துக்களையும் பேச்சுக்களையும் ஆராய்ந்த ஆய்வாளர்கள் பலர் குறித்த ஒரு விடயத்தில் உடன்படுகிறார்கள். யாழ் வேளாள உயர்குடியில் இருவரும் பிறந்து வளர்ந்த போதும் இருவரது அரசியற் பாதைகளும் மிகவும் வேறுபட்டவை. யாழ் சைவ வேளாள உயர்குடி நலன்களைப் பேணிக்காப்பதில் இராமநாதன் கண்ணும் கருத்துமாக இருந்தார். மாறாக மலையக் தமிழ்த் தொழிலாளர்கட்காகவும் சகல தொழிலாளர்களுக்காகவும் குரல் கொடுத்ததோடு அதற்கான அரசியல் ஆதரவைத் திரட்டவும் செயற்பட்ட அருணாசலம் தனது வர்க்கத்தினரினின்று மிகவும் வேறுபட்டவராகத் தெரிந்தார். அவர் இலங்கையின் தொழிலாளர்கள், விவசாயிகள், கூலி உழைப்பாளிகள் குறித்து அதிகம் அக்கறை காட்டினார்.

இராமநாதன் தனது இறுதிக்காலத்தில் இறுகிப்போன சைவவேளாள மேட்டுக்குடி அகங்காரத்தால் கட்டுண்டிருந்தார். மாறாக அருணாசலம் உழைக்கும் மக்கள் நலம்நாடும் தீவிர நிலைப்பாட்டை உடையவராக இருந்தார். எமது முன்னோடியாக இருவரில் நாம் யாரைக் கொள்கிறோம் என்பது நாம் யாருடைய நலன்களை நாடுகிறோம் என்பதைச் சொல்லும்.

பெண் தொழில்முனைவாளர்களுக்கு வலுவூட்ட

# HSBC, சர்வோதய அமைப்பும் இணைவு




HSBC, இலங்கையிலுள்ள பெண் தொழில் முனைவாளர்களுக்கு வலுவூட்டுவதற்காக, சர்வோதய சிரமதான அமைப்புடன் (LJSSS) பங்காளித்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. நாட்டிலுள்ள ஐந்து மாகாணங்களில் பெண் தொழில் முனைவாளர்கள் எதிர்நோக்கும் தனித்துவமான சவால்களை நிவர்த்தி செய்வதும், அவர்களின் வியாபார வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கிக்கொடுப்பதும் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். 40 மில்லியன் ரூபாய் முதலீட்டுடன் கடந்த மாதம் இந்த இரண்டு வருட திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டம், சர்வோதயவின் அபிவிருத்திக்கான ICT பிரிவான சர்வோதய-ஃபியூஷன் ஊடாக சர்வோதய இயக்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும்.

இக் கூட்டு முயற்சியின் கீழ், நாட்டின் மேற்கு, கிழக்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் தென் மாகாணங்களில் பல்வேறு தொழில்கள் மற்றும் துறைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 150 பெண்களின் தலைமையிலான சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகளுக்கு (SMEs) விரிவான உதவிகளும் பயிற்சியும் வழங்கப்படும். தமது வியாபார அறிவை மேம்படுத்துவதற்கும் பேண்தகு வளர்ச்சியை முன்னெடுப்பதற்கும் அவசியமான திறன்கள், அறிவு மற்றும் மூலவளங்களை இப் பெண் தொழில் முனைவாளர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதே திட்டத்தின் குறிக்கோளாகும்.

HSBC இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் சேர்ஜ்னர், இப் பங்காளித்துவம் பற்றிக் குறிப்பிடுகையில், “இலங்கையிலுள்ள பெண் தொழில் முனைவாளர்களின் நிலையை மேம்படுத்தவும் அவர்களுக்கு வலுவூட்டவும் இடமளிக்கும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த வேலைத்திட்டத்தில் LJSSS உடன் இணைந்து செயற்படுவது குறித்து நாம் பெருமையடைகின்நோம். எமது மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் மாத்திரமன்றி, நாம் செயற்படுகின்ற சமூகங்களுக்கும் விரிவான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென ர்ளுடீஊயிலுள்ள நாம் நம்புகின்றோம். பெண்களின் தலைமையிலான இந்த வியாபாரங்களின் உள்ளார்ந்த ஆற்றலில் முதலீடு செய்வதும், பெண் தொழில் முனைவாளர்களுக்கு அவசியமான வசதிகளையும் மூலவளங்களையும் வழங்கி அவர்களுக்கு வலுவூட்டுவதும் வறுமை ஒழிப்பு, தொழில்களின் உருவாக்கம் மற்றும் ஒட்டுமொத்தமான சமூக-பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யும் என்பது எமது நம்பிக்கையாகும்” என்று கூறினார்.

சர்வோதய இயக்கத்தின் தலைவர் கலாநிதி. வின்யா ஆரியரத்ன கருத்து வெளியிடுகையில், “பெண் தொழில் முனைவாளர்களுக்கு வலுவூட்டுவதற்கான இப் புதிய முயற்சியில் ர்ளுடீஊ உடன் கூட்டுச் சேர்ந்திருப்பது குறித்து நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எமது இருதரப்புக்களினதும் நிபுணத்துவம் மற்றும் மூலவளங்களைக் கூட்டிணைத்துப் பயன்படுத்துவதன் மூலம் பெண் தொழில் முனைவாளர்களின் வளர்ச்சிக்கு வழிகோலவும் அவர்கள் தற்சமயம் எதிர்நோக்கப்படும் தடைகளை முறியடிப்பதற்கு உதவவும் உகந்ததொரு சூழலை எம்மால் உருவாக்க முடியும். இப் பெண்களுக்கு வலுவூட்டவும் அவர்களின் வியாபாரங்களை மேம்படுத்தவும் அதன் மூலம் இலங்கையில் பெண் தலைமையிலான தொழில் முனைவாண்மையின் ஒரு புதிய அலையைத் தூண்டவும் ஒருங்கிணைந்து முயல்வதே எமது நோக்கமாகும்” என்று குறிப்பிட்டார்.

ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான செயலமர்வுகள், வழிகாட்டுதல் திட்டங்கள் மற்றும் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி அமர்வுகள் ஊடாக, தொழில் முனைவாண்மையின் பல்வேறு துறைகளில் இந்த வேலைத்திட்டம் கவனம் செலுத்தும். நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் உபாயங்கள், உற்பத்திப் பொருள் உருவாக்கம், சந்தையை அணுகும் வாய்ப்பு என்பனவும் இத் துறைகளில் உள்ளடங்கும். இந்த வேலைத்திட்டத்தில் பங்குபற்றும் SME தொழில் முயற்சிகள் விரிவடைந்துவரும் வியாபார அரங்கில் தமது போட்டி நிலையை மேம்படுத்திக்கொள்ள உதவும் பொருட்டு, அவற்றிற்கு டிஜிட்டல் மாற்ற மற்றும் தொழில்நுட்பத் தழுவல் தொடர்பான வழிகாட்டுதல்களும் வழங்கப்படும்.

இலங்கையில் பெண்களுக்கு வலுவூட்டுதல், பொருளாதார ரீதியாக அவர்களை உள்ளடக்குதல், அவர்களின் சமூக அபிவிருத்தி ஆகிய விடயங்களில் HSBC மற்றும் சர்வோதய இயக்கம் ஆகியவற்றின் பொதுவான அர்ப்பணிப்பை இந்த முன்முயற்சி எடுத்துக்காட்டுகின்றது. பெண்களின் தலைமையிலான SME தொழில் முயற்சிகளுக்கு வலுவூட்டுவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு வளமான தொழில் முனைவாண்மைச் சூழலமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

பெண் தொழில் முனைவாளர்களுக்கு வலுவூட்டுதல், பொருளாதார வளர்ச்சிக்கு உந்துசக்தி அளிப்பதோடு மட்டுமல்லாமல், அதன் சிற்றலை விளைவுகளினால் குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் ஒட்டுமொத்தச் சமுதாயத்திற்கும் சாதகமான பயன்களை வழங்கும் என்று HSBC யும் சர்வோதய அமைப்பும் உறுதியாக நம்புகின்றன.



றைனோ ரூஃபிங் நிறுவனத்தினால் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில்

# நோயாளர் காத்திருப்பு பகுதி நிர்மாணம்

றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிகிச்சைத் தொகுதி வளாகத்தில் நோயாளர் காத்திருப்பு பகுதி ஒன்றை நிர்மாணித்துள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகை தருவோருக்கும், அவர்களுடன் சமூகமளிக்கும் குடும்பத்தாருக்கும் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்த நிர்மாணம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த காத்திருப்பு பகுதியின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றதுடன், இதில் றைனோ ரூஃபிங் புரொடக்ட்ஸ் லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் ஈ.ஜே. ஞானம், றைனோ நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் ஊழிய அங்கத்தவர்கள், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலைப் பணிப்பாளர். வைத்தியர். (திருமதி) ஹிமாலி விஜேகுணசேகர மற்றும் கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

100 நோயாளர்கள் வரை காத்திருக்கக்கூடிய வகையில் 1400 சதுர அடிப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த காத்திருப்பு அறையில் பொது அறிவித்தல் கட்டமைப்பு மற்றும் மின்விசிறிகள் போன்றன பொருத்தப்பட்டுள்ளன. றைனோ முகாமைத்துவ பணிப்பாளர் ஈ.ஜே. ஞானம் கருத்துத் தெரிவிக்கையில், “றைனோவைச் சேர்ந்த எம் அனைவருக்கும் இது மிகவும் விசேடமான தருணமாகும், ஏனெனில் இந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ளமையானது, எனது மறைந்த தந்தை. தேசமான்ய ஏ.வை.எஸ். ஞானம் அவர்களின் 100ஆவது பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. 1978 ஆம் ஆண்டில் றைனோ நிறுவனத்தின் தவிசாளர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளராக இவர் பொறுப்பேற்றதுடன், 1962 ஆம் ஆண்டில் குழுமமாக எமது பயணத்தை ஆரம்பித்து 60 வருட பூர்த்தியைக் குறிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. றைனோ ரூஃபிங்கைச் சேர்ந்த நாம் தொடர்ந்தும் எமது வாடிக்கையாளர்களுக்கு சேவைகளைப் பெற்றுக் கொடுக்க எதிர்பார்ப்பதுடன், சிறந்த தரம் வாய்ந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி அவர்களின் எதிர்பார்ப்புகளை விஞ்சுவதற்கு எதிர்பார்க்கின்றோம். எமது பணியின் சிறந்த உதாரணமாக இந்த காத்திருப்புப் பகுதி அமைந்திருப்பதுடன், இலங்கையில் கூரைகள் மற்றும் சீலிங் தயாரிப்புகள் தொடர்ச்சியாக விநியோகிப்பதில் சந்தை முன்னோடியாக திகழ்வதற்கான எமது உறுதி மொழியாகவும் அமைந்துள்ளது. இந்த காத்திருப்புப் பகுதியின் நிர்மாணத்துடன், வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் தினசரி சுயநோக்கமற்ற பங்களிப்புக்காக நன்றி தெரிவிப்பதுடன், சமூகத்துக்கு மீள வழங்குவது எனும் தகவலின் பிரகாரம் இந்தத் திட்டத்தை பூர்த்தி செய்வதில் பங்காற்றியிருந்த எனது அணியைச் சேர்ந்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.” என்றார்.

கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் (திருமதி) ஹிமாலி விஜேகுணசேகர கருத்துத் தெரிவிக்கையில், “இந்த காத்திருப்பு பகுதியின் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்காக றைனோ ரூஃபிங் போன்றதொரு பாரிய நிறுவனம் முன்வந்து செயலாற்றியிருந்தமையை காண்பதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம். நாளாந்த அடிப்படையில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யும், வெளியேறும் நோயாளர்களுக்கு இந்தத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையினூடாக பெருமளவு பயன் கிடைக்கும் என வைத்தியசாலையைச் சேர்ந்த நாம் கருதுகின்றோம். அத்துடன், நோயாளர்களினதும், அவர்களின் அன்புக்குரியவர்களினதும் சௌகரியத்தை உறுதி செய்வதற்கான ஒரு திட்டமாகவும் இது அமைந்துள்ளது.” என்றார்.

# புத்தாக்க தொழில்முனைவோரின் கண்காட்சி








கொழும்பு, இலங்கை -சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) மற்றும் வர்த்தகத்தை துரிதப்படுத்த உதவும் குட் லைஃப் எக்ஸ் (GLX) நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து தங்களது காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடையும் சிந்தனைகளை உருவாக்குவதற்காக தீவிர உதவிகளைப் பெற்ற பத்து தொழில்முனைவோர் புதன்கிழமை நடைபெற்ற Demo Day நிகழ்வில் தங்களது பெறுபேறுகளை காட்சிப்படுத்தினர்.

ஆரம்ப நிலையிலுள்ள வணிகங்களை பெரியளவிலான மற்றும் நிலைபேறான நிறுவனங்களாக வளர்ச்சியடைவதற்கு உதவி செய்யும் எட்டு மாதகால நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவாக இந்த Demo Day அமைந்தது. காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து மீண்டெழுவதற்காக இலங்கையில் காணப்படும் விவசாயம், மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றுடன் தொடர்புடைய வாழ்வாதாரங்கள் கொண்டுள்ள மீண்டெழும் தன்மையினை அதிகரிக்கக்கூடிய அளவிற்கு அவற்றை வளர்ச்சியடையச் செய்வதில் இந்நிகழ்ச்சித்திட்டம் கவனம் செலுத்தியது. இந்நிகழ்வில் 80இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள், பங்காளர்கள் மற்றும் ஒத்துழைப்புடன் பணியாற்றுபவர்களின் முன்னிலையில் 10 வணிகங்கள் தமது புத்தாக்கங்களை காட்சிப்படுத்தின.

நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்ட இந்நிகழ்வில் அறிமுகப்படுத்தப்பட்ட காலநிலை திறனுடைய புத்தாக்கங்களுள், உணவை சிறப்பாகப் பேணிப்பாதுகாப்பதற்கான தயாரிப்புகள், சூரியசக்தியிலிருந்து மின்னேற்றும் கருவிகள், ஆற்றல் திறன் கொண்ட தேயிலை உலர்த்திகள், நகர்ப்புற விவசாய மாதிரிகள் மற்றும் கடற்பாசியினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் சேதன உரம் ஆகியவை அடங்கும். GLX மற்றும் USAID இன் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடையும் செயற்திட்டத்தின் Climate Change Accelerator செயற்பாட்டின் ஊடாக, புத்தாக்கம், வணிகம், காலநிலை மாற்றம், விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்களால் இந்த வணிகங்கள் பயிற்றுவிக்கப்பட்டன.

“எமது உலகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால்களில் ஒன்று சில சிறந்த வணிக வாய்ப்புகளையும் வழங்குகிறது என்பதை எண்ணுகையில் ஊக்கம் பிறக்கிறது” என நிகழ்வில் உரையாற்றிய அமெரிக்கத் தூதரகப் பிரதிப் பிரதானி டக்ளஸ் சொனெக் கூறினார். “காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இந்த நிறுவனங்கள் வெளிப்படுத்திய தலைமைத்துவம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.” என அவர் மேலும் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கமடைவதற்காக தொழில்முனைவோரின் புத்தாக்கங்களைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை GLX நிறுவனத்தின் ஸ்தாபக பிரதம நிறைவேற்று அதிகாரி ரந்துல டி சில்வா குறிப்பிட்டார்.

“காலநிலை மாற்றம் என்பது, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், உண்மையில் நடைபெறும் ஒரு விடயமாகும்” என அவர் கூறினார். “உணவுப் பாதுகாப்பு, உயிரினப்பல்வகைமை மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகியவற்றிற்கான மிக அவசரமான அச்சுறுத்தலாகவும் அது விளங்குகிறது; சுருக்கமாகக் கூறுவதாயின், பூமியில் உயிர்வாழ்க்கைக்கான மிக அவசரமான அச்சுறுத்தலாக காலநிலை மாற்றம் விளங்குகிறது. காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கமடையும் திறனை தொழில்முனைவோருக்கு வழங்கும் வகையில் இந்நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன்காரணமாக அவ்வாறான மாற்றங்களுக்கு மத்தியிலும் எங்களது சமூகங்களும் சூழற்தொகுதிகளும் மீண்டெழும் தன்மையுடன் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் செழித்து வளரக்கூடியதாகவும் இருக்கும்.” என அவர் மேலும் தெரிவித்தார்.

காட்சிப்படுத்தப்பட்ட 10 வணிகங்கள் மற்றும் அவற்றின் புத்தாக்கங்கள் என்பன பின்வருமாறு:

ஆகியவற்றை உணவுப் பொருட்களைப் பாதுகாப்பதில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனமான Food Things உணவுப்பொருட்களை அடுக்குத்தட்டுகளில் வைத்திருக்கக்கூடிய காலஅளவினை அதிகரிக்கக்கூடிய புதிய வெற்றிட முத்திரையிடும் இயந்திரம் மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் ஒரு உணவு உலர்த்தியைப் பயன்படுத்துவதற்கான அவர்களின் திட்டம் தொடர்பாக விளக்கமளித்தது;

சுற்றுச்சூழல்-போக்குவரத்து நிறுவனமான Kulumoto கொள்வனவு செய்பவர்களுக்கு பூச்சிய கார்பன் தடத்தீர்வினை வழங்கும் சூரியசக்தியிலிருந்து மின்னேற்றம் செய்யும் ஒரு முன்மாதிரிக் கருவி தொடர்பாக விளக்கமளித்தது. இது மின்னேற்றத்திற்காக மின்சாரத்தில் தங்கியிருக்கும் அவர்களது முந்தைய மாதிரிக்கு மாற்றாக அமைந்திருந்தது.

சிறிய அளவிலான தேயிலைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சில விவசாயிகளுடன் இணைந்து வீட்டில் தயாரிக்கப்பட்ட சேதன வனத் தேயிலையினை உற்பத்தி செய்யும் Saruketha Organics நிறுவனமானது அவர்களின் புதிய ஆற்றல் வினைத்திறனுடைய தேயிலை உலர்த்தும் இயந்திரம் தொடர்பாக விளக்கமளித்தது.

நீர்வளர்ப்பினையும் ஒருங்கிணைந்த வெளிப்புற விவசாய முறைகளையும் இணைக்கும் அதன் நகர்ப்புற விவசாய மாதிரி தொடர்பாக Ceylon Green and Aqua நிறுவனம் விளக்கமளித்தது;

Carbon Blueprint நிறுவனமானது, காய்கறிகள் மற்றும் அலங்காரச் செடிகளுக்கு திரவ சேதன உரங்களைத் தயாரிப்பதற்காக விளைச்சல் செய்யப்பட்ட கடற்பாசிகளுக்கு விரிவாக்கப்பட்ட பெறுமதி அதிகரிப்புச் செயன்முறையுடன் இணைத்து தனது புதிய கடற்பாசி வளர்ப்புத் திட்டம் தொடர்பாக விளக்கமளித்தது;

கெப்பு எல நதி மற்றும் அதன் சதுப்புநிலங்களைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் சூழல்-சுற்றுலா வணிகமுயற்சியான Tourmate.lk (Eco Escape- Galle என வர்த்தகக்குறிமாற்றம் செய்யப்பட்ட) நிறுவனமானது, சுற்றுப்பயணங்களை எளிதாக்குவதற்கான கிட்டத்தட்ட பூச்சிய சுற்றுச்சூழல் தடத்தினைக் கொண்ட மின்சார மோட்டார் மூலம் இயங்கும் படகினைப் பயன்படுத்தும் அதன் புதிய வணிக மாதிரி தொடர்பாக விளக்கமளித்தது;

ஒரு கழிவுப்பொருள் குறைப்பு செயன்முறையாக மண்ணைப் பதப்படுத்தும் தனது உயிர்க்-கரி உற்பத்தி வணிகம் தொடர்பாக Inova நிறுவனம் விளக்கமளித்தது;

சுதேச மூலிகைகள், வாசனைத்திரவியங்கள் மற்றும் பூக்களைப் பயன்படுத்தி சுவையூட்டப்பட்ட தேயிலையினை உற்பத்தி செய்யும் தனது வர்த்தகம் தொடர்பாக Therapy Ceylon விளக்கமளித்தது;

ஏற்றுமதி பயிர்களின் தாவரங்கள் மற்றும் விதைகளை உற்பத்தி செய்யும் Iluktenne Plant Nursery நிறுவனமானது, காலநிலை மாற்றம் மற்றும் காடழிப்பு காரணமாக அழிவடையும் அபாயத்தில் உள்ள வனத் தாவரங்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, தாவர நாற்று மேடைகளில் வனத்தாவர நாற்றுகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடனான அதன் விரிவாக்கத் திட்டம் தொடர்பாக விளக்கமளித்தது.

காலநிலை மாற்றம் தொடர்பான தாக்கங்களுக்கு சிறப்பாக இசைவாக்கமடைவதற்காக விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய பொலிடனல் பசுமை இல்லங்கள் மற்றும் ஏனைய காலநிலை-திறன் தொழில்நுட்பங்கள் குறித்து கிராமப்புற விவசாயிகளுக்கு அறிவூட்டும் தனது முயற்சி தொடர்பாக The Raawna Agro Limited விளக்கமளித்தது.

கர்நாடக

## சார்ஜரில் இருந்து பாய்ந்த மின்சாரத்தால் சிசு மரணம்



கர்நாடக மாநிலம் உத்தரகன்னடா மாவட்டம் கார்வாரை சேர்ந்தவர் சந்தோஷ் கல்குட்கர். இவரது மனைவி சஞ்சனா. இந்த தம்பதிக்கு சானித்யா எனும் 8 மாத பெண் சிசு உள்ளது.

சம்பவத்தினத்தன்று தம்பதி அலைபேசியை சார்ஜரில் போட்டு,சார்ஜ் ஆனதும் அலைபேசியை எடுத்த தம்பதியினர், பிளக்கில் செருகி இருந்த சார்ஜர் இணைப்பை கழற்றாமல் விட்டுவிட்டனர்.

இந்நிலையில் சிசு அந்த சார்ஜர் வயரை பிடித்து விளையாடிக்கொண்டிருந்த போது அந்த வயரை தனது வாயில் திணித்து விளையாடியுள்ளது. அந்த சமயத்தில் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில் சிசு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

ஒடிசா

## மாட்டின் வயிற்றில் 30 கிலோ கிராம் பிளாஸ்டிக்




ஒடிசாவில் சாலையில் அலைந்து திரிந்த ஒரு மாட்டின் வயிறு முழுவதும் பிளாஸ்டிக் கழிவுகளால் நிரம்பியதால், உடல் நலமின்றி காணப்பட்டுள்ளது. அந்த மாட்டை கஞ்சம் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அப்போது பரிசோதித்த வைத்தியர்கள் வயிற்றுக்குள் பிளாஸ்டிக் கழிவுகள் அதிக அளவில் உள்ளதை கண்டுபிடித்து, அறுவை சிகிச்சை மூலம் அகற்ற முடிவு செய்தனர். அறுவை சிகிச்சை செய்தபோது, வயிற்றில் இருந்து பிளாஸ்டிக் கழிவு வந்து கொண்டே இருந்துள்ளது. சுமார் 30 கிலோ கிராம் பிளாஸ்டிக் கழிவுகள் வயிற்றில் இருந்து வெளியே எடுத்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

XX

## புதிய ஊழியராக "பிஜ்லி" நியமனம்




ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான பவிஷ் அகர்வால் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள ஒரு அறிவிப்பு வைரலாகி வருகிறது. அதில், நிறுவனத்தின் புதிய ஊழியராக பிஜ்லி என்ற நாயை பணி அமர்த்தி இருப்பதாக அறிமுகப்படுத்தி, அதற்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையையும் பகிர்ந்துள்ளார்.

பிஜ்லி என்றால் ஆங்கிலத்தில் மின்சாரம் என்று பொருள். இது நிறுவனத்தின் மின்சார வாகனத்தின் வணிகத்தை குறிக்கிறது. நாயின் பணியாளர் குறியீடு '440வி' ஆகும். இது 440 வோல்ட்டுகளுக்கான அடையாளம் ஆகும். நாயின் அவசர தொடர்பு பி.ஏ. அலுவலகம் என பட்டியலிடப்பட்டுள்ளது.

இது பவிஷ் அகர்வாலின் அலுவலகத்தை குறிக்கிறது. அதாவது பிஜ்லியின் இருப்பிடம் ஓலா எலக்ட்ரிக் நிறுவனத்தின் பெங்களூரு அலுவலக முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரேனின் முக்கிய துறைமுகம் மீது

உக்ரேன்


# டிரோன் தாக்குதல்

ரஷிய- உக்ரேன் ஆகிய இரு நாடுகளுக்கு இடையிலான போர் தற்போது 525 நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து வருகின்றது. இந்நிலையில், உக்ரேன்-ருமேனியா எல்லை வழியாக ஓடும் டானுபே ஆற்றின் அருகே உள்ள இஸ்மாயில் துறைமுகத்தை (port of Izmail) ரஷ்யா டிரோன்கள் மூலம் தாக்கியது. இதனால் அத்துறைமுகத்திலிருந்து தானியங்களை ஏற்றி செல்லும் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இஸ்மாயில் துறைமுகத்திலிருந்து தானியங்களை ஏற்றி செல்ல கப்பல்கள் அத்துறைமுகத்திற்கு உள்ளே வர இருந்தபோது இந்த தாக்குதல் நடைபெற்றது.

"ஆப்பிரிக்கா, இஸ்ரேல் மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்காக தானியங்களை ஏற்றி செல்ல கப்பல்கள் வர இருந்தன. இத்தாக்குதல்களால் 40 ஆயிரம் தொன் தானியங்கள் சேதமாகியிருக்கிறது. டானுபே துறைமுகத்தின் கட்டமைப்பு பெருமளவில் சேதமடைந்திருக்கிறது. உக்ரேனின் தானிய ஏற்றுமதிக்கு ஈடாக வேறு ஒரு நாடு ஏற்றுமதி செய்ய முடியாது" என்று இந்த தாக்குதல் குறித்து உக்ரேன் துணை பிரதமர் ஒலெக்ஸாண்டர் குப்ரகோவ் (Oleksandr Kubrakov) தெரிவித்துள்ளார்.

"உலகத்திற்கே சர்வ நாசத்தை விளைவிக்கும் ஒரு போரை ரஷ்யா நடத்தி வருகிறது. அவர்களின்



இந்த வெறியாட்டத்தால் உலக உணவு சந்தை அழிந்துவிடும். அதைத்தான் அவர்களும் விரும்புகிறார்கள். தானிய விநியோகம் பாதிக்கப்படுவதைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்" என உக்ரேன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள ரஷ்யா, "அந்த துறைமுகம் அயல்நாட்டு பயங்கரவாதிகளுக்கும், இராணுவ தளவடங்களுக்கும் புகலிடமாக திகழ்ந்தது" என கூறியிருக்கிறது.

வொஷிங்டன்

## துப்பாக்கிச்சூடு வதந்தியால் பதற்றம்

அமெரிக்க செனட் கட்டடத்தில் துப்பாக்கிச்சூடு நடக்கப் போவதாக வந்த அழைப்பால் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. அமெரிக்காவின் யு.எஸ். கேப்பிடோல் பொலிஸாரின் 911 என்ற அவசர எண்ணிற்கு திடீரென ஓர் அழைப்பு வந்துள்ளது. அந்த அழைப்பில் அமெரிக்காவின் செனட் சபை கட்டிட வளாகத்தில் துப்பாக்கிச்சூடு நடக்கப் போவதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று செனட் கட்டிட வளாகத்தில் சோதனை நடத்தினர். மேலும் செனட் கட்டடத்திற்குள் இருக்கும் பொதுமக்களை பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தினர். எந்நேரமும் துப்பாக்கிச்சூடு நடக்கலாம் என்று கூறப்பட்டதால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. தொடர்ந்து பொலிஸார் நடத்திய சோதனையில் எந்த ஆயுதமும், யாரும் சிக்கவில்லை. இதையடுத்து அந்த அழைப்பு போலியாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

ரஷ்யா

## 14 ஆண்டுகளாக பாலியல் அடிமையாக வைத்திருந்த கொடூரன்

ரஷ்யாவின் செல்யாபின்ஸ்க் பகுதியில் இளம்பெண்ணை வீட்டில் அடைத்து, 14 ஆண்டுகளாக பாலியல் அடிமையாக வைத்திருந்து சித்ரவதை செய்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

செஸ்கிடோவ் என்ற நபர், எகடெரினா என்ற 19 வயது இளம்பெண்ணை 2009ம் ஆண்டு சந்தித்துள்ளார். அப்போது அவரிடம் ஆசை வார்த்தைகள் பேசி வீட்டிற்கு மது அருந்த வரும்படி அழைத்துள்ளார். அங்கு சென்றபின் அவரை வெளியே அனுப்பாமல் தொடர்ந்து வீட்டுக்குள்ளேயே பாலியல் அடிமையாக வைத்துள்ளார்.

இவ்வாறு 14 ஆண்டுகள் கொடுமையை அனுபவித்த அந்த பெண், சமீபத்தில் அந்த வீட்டில் இருந்து தப்பி வந்துள்ளார்.





## ஒய்வு பெற்ற புபான்

கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்றதாக இத்தாலியக் கோல் காப்பாளர் ஜல்லூயிஜி புபான் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தை 2006ஆம் ஆண்டு வென்ற 45 வயதான புபான், 10 இத்தாலிய சீரி ஏ பட்டங்களையும், ஒரு லீக் 1 பட்டத்தையும் வென்றுள்ளார்.

கடந்த 1995ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்டு 28 ஆண்டுகளுக்குப் பின்னர் வரலாற்றில் அதிக போட்டிகள் விளையாடிய கோல் காப்பாளராக 176 போட்டிகளில் புபான் விளையாடியுள்ளார்.

## செல்சி செல்லும் மப்பே?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியில் ஓராண்டு ஒப்பந்தமொன்றில் இணைய பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரர் கிலியான் மப்பே தயாரெனக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த பருவகாலத்தில் இலவசமாக ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டில் இணைவேன் என்ற நிபந்தனையிலேயே இவ்வாறு செல்சிக்குச் செல்ல 24 வயதான மப்பே சம்மதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய ஜோ றூட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு இங்கிலாந்தின் ஜோ றூட் முன்னேறியுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான ஐந்தாவது டெஸ்டில் 96 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்தே மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தை றூட் அடைந்துள்ளார்.

இதேவேளை குறித்த போட்டியில் 125 ஓட்டங்களைப் பெற்றமையைத் தொடர்ந்து ஆறாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தை அவுஸ்திரேலியாவின் ஸ்டீவன் ஸ்மித் அடைந்துள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் 39 ஓட்டங்களைப் பெற்ற பாபர் அஸாம், ஐந்தாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

தவிர, இங்கிலாந்துக்கெதிரான மேற்கூறப்பட்ட டெஸ்டில் 119 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் உஸ்மான் கவாஜா, எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.



இந்நிலையில், இதே டெஸ்டில் 92 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் ஹரி ப்ரூக், 11ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு, 1

கேன் வில்லியம்ஸன், 2. ஜோ றூட், 3. ஸ்டீவ் ஸ்மித், 4. பாபர் அஸாம், 5. மர்னுஸ் லபுஷைன், 6. ட்ரெவிஸ் ஹெட், 7. உஸ்மான் கவாஜா, 8. டரைல் மிற்செல், 9. ஹரி ப்ரூக், 10. றோஹித் ஷர்மா.

மேற்படி டெஸ்டில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்தின் ஸ்டுவர்ட் ப்ரோட், எட்டாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவிச்சந்திரன் அஷ்வின், 2. ககிஸோ றபாடா, 3. இரவீந்திர ஜடேஜா, 4. ஸ்டுவர்ட் ப்ரோட், 5. பற் ப்கமின்ஸ், 6. ஷகீன் ஷா அஃப்ரிடி, ஒலி றொபின்ஸன், 8. ஜேம்ஸ் அன்டர்சன், 9. நேதன் லையன், 10. ஜஸ்பிரிட் பும்ரா.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. ஷகிப் அல் ஹஸன், 4. பென் ஸ்டோக்ஸ், 5. அக்ஸர் பட்டேல்.



இலங்கைக்கு வாருங்கள் அரை மரதனோட்டப் போட்டி:

## முதலிடம் பெற்ற ரத்னபால, மிடர்

எம்.ஏ. றமீஸ்

இலங்கைக்கு வாருங்கள் எனும் தொனிப்பொருளில் அறுகம்பே அபிவிருத்தி ஒன்றியத்தில் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்ற அரை மரதனோட்டப் போட்டியில் ஆண்களில் டி.டபிள்யூ. ரத்னபால முதலிடத்தைப் பெற்றதோடு, பெண்களில் தெரேசா மிடர் முதலிடத்தைப் பெற்றார்.

ஆண்கள் பிரிவின் 21.1 கிலோ மீற்றர் மரதனோட்டப் போட்டியில் கெலும் தர்மபால இரண்டாமிடத்தையும், ஸ்டீபன் பார் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண்களில் ஜெவான் பொனரோ இரண்டாமிடத்தையும், லோரா மெகென்ஸி மூன்றாமிடத்தைப் பெற்றனர்.

10 கிலோ மீற்றர் மரதனோட்டப் போட்டியில் மார்க்னெஸ் முதலாமிடத்தையும், சப்னாஜ் உபைதுல்லா இரண்டாமிடத்தையும், ஜிராட் பீர்னி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 03 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.